Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 59 | உள்ளூர் - 28.02.2026 | சனி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 59 | வெளியூர் - 01.03.2026 | ஞாயிறு | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



பெடரல் பேங்க் காலியிடங்கள்; டிகிரி!

சனி பெயர்ச்சி 2026; 12 ராசிகளுக்கான பலன்கள்-பரிகாரங்கள்

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்: பதற்றம்

கரூர் தொடங்கி -விவாகரத்து வரை... விஜயை துரத்துகிறதா 'டைம்லைன்'


## பிரதமர் வருகை: திருப்பரங்குன்றம் கோயிலில் சோதனைக்குப் பிறகே மக்கள் அனுமதி!

திருப்பரங்குன்றம், பிப். 28–

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு நாளை(மார்ச் 1) பிரதமர் மோடி வருவதையொட்டி அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும், கோயிலைச் சுற்றி செல்போன் சிக்னலைத் தடுக்கும் ஜாமர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. பலத்த சோதனைக்குப் பிறகே பக்தர்கள் கோயிலின் உள்ளே கோயிலில் பாதுகாப்பு குறித்து இன்று சிறப்புப் படையினர் ஆய்வு செய்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.





பிரதமர் வருகையையொட்டி திருப்பரங்குன்றம் கோயில் மற்றும் சுற்றுப் பகுதி முழுவதும் காவல்துறையின் பாதுகாப்பில் உள்ளது.

திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீப திருவிழாவின்போது மலை உச்சியில் தீபம் ஏற்றுவது குறித்த சர்ச்சை ஏற்பட்டது. இதன்பின்னர் பிரதமர் மோடி தற்போது திருப்பரங்குன்றம் வரவிருப்பதால் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**பிரதமர் பயணம்**

பிரதமர் மோடி குஜராத் மற்றும் ராஜஸ்தான் பயணங்களைத் தொடர்ந்து இன்று(சனிக்கிழமை) இரவு 9 மணியளவில் விமானம் மூலம் சென்னை வருகிறார். இதையடுத்து, நாளை(ஞாயிற்றுக்கிழமை) காலை புதுச்சேரி செல்லும் அவர், அங்கு ரூ. 2,700 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். மார்ச் 1 மாலை 3 மணியளவில் மதுரைக்குச் செல்லும் பிரதமர் மோடி, அங்கு ரூ. 4,400 கோடி மதிப்பிலான கட்டமைப்புத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பின்னர், மாலை 4 மணியளவில் திருப்பரங்குன்றம் சுப்ரமணியசுவாமி கோயிலில் தரிசனம் செய்கிறார். இத்துடன், மரக்காணம் – புதுச்சேரி மற்றும் பரமக்குடி – ராமநாதபுரம் இடையிலான புதிய நான்கு வழி நெடுஞ்சாலையின் பணிகளை பிரதமர் மோடி தொடக்கி வைக்கவுள்ளார். மேலும், அமிர்த பாரத் திட்டத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட தமிழ்நாட்டின் மொரப்பூர், பொம்மிடி, ஸ்ரீவில்லிபுத்தூர், சோழவந்தான், மணப்பாறை, பொள்ளாச்சி சந்திப்பு, காரைக்குடி சந்திப்பு மற்றும் திருவாரூர் சந்திப்பு உள்ளிட்ட 8 ரயில் நிலையங்களை பிரதமர் திறந்து வைக்கிறார். இதனைத் தொடர்ந்து, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அரசின் திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் திட்டங்களையும் அவர் தொடக்கி வைக்கிறார்.

இதையடுத்து தமிழ்நாட்டில் ஒளிபரப்பு சேவைகளை வலுப்படுத்த, கும்பகோணம், ஏற்காடு மற்றும் வேலூரில் மூன்று புதிய ஆகாஷ்வாணி எஃப்எம் ரிலே டிரான்ஸ்மிட்டர்களை பிரதமர் மோடி திறந்து வைக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்...

# அதிகரிக்கும் போர் பதற்றம்..! உற்று கவனிக்கும் அமெரிக்கா...!!

### இஸ்ரேலில் அவசரநிலை பிரகடனம்...

இஸ்ரேல், பிப். 28–

ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது இஸ்ரேல் தற்போது போர் விமானம் மூலம் குண்டுவீச்சு தாக்குதலை தொடங்கி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால், மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு ஈரான் அரசு வலியுறுத்தி உள்ளது. மேலும் ஈரான் பதில் தாக்குதல் நடத்தும் என்பதால் இஸ்ரேல் அதன் வான்வெளியை முற்றிலுமாக மூடியுள்ளது. இஸ்ரேலில் உள்ள விமான நிலையங்கள் மூடப்பட்டன.

ஈரானில் பதற்றம் நிலவி வரும் நிலையில், அங்கிருந்து தங்கள் குடிமக்களை ஈரானை விட்டு உடனே வெளியேறுமாறு இதுவரை 15 நாடுகள் அறிவுறுத்தியிருந்தன. ஈரான் நாட்டில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளை உடனே வெளியேறுமாரு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டிருந்தார். இந்தியா, போலாந்து, சுவீடன் உள்ளிட்ட முக்கிய நாடுகளும் தங்களின் குடிமக்கள் உடனே ஈரானில் இருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தியிருந்தன.

கடந்த வியாழக்கிழமை ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா – ஈரான் பிரதிநிதிகளுக்கு இடையே நடந்த பேச்சு வார்த்தையில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படாததை தொடர்ந்து, சீனாவும் தங்கள் நாட்டை மக்கள் உடனே ஈரானில் இருந்து வெளியேறும்படி அறிவுறுத்தி உள்ளது. இது சர்வதேச அரசியலில் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஏனென்றால், ஈரான் நாட்டில் இருந்து அதிகப்படியாக கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்யும் நாடு சீனா. ஐக்கிய நாடுகள் சபையிலும் ஈரானுக்கு தோள்கொடுத்த நாடாக சீனா இருந்தது. கடந்த 20 ஆண்டுகளாக மேற்கத்திய நாடுகள் ஈரானை தனிமைப்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்த நிலையில், அதற்கு சீனாவும் பல்வேறு முட்டுக்கட்டையை போட்டிருக்கிறது.

ஆனால், கடந்த வியாழன் அன்று, 'குறிப்பிடத்தக்க பாதுகாப்பு அபாயங்கள் இருப்பதாகக் கூறி, ஈரானில் வசித்து வரும் அனைத்து சீன குடிமக்களும் உடனடியாக அந்நாட்டில் இருந்து வெளியேறும்படி சீனா உத்தரவிட்டிருக்கிறது. அதாவது, ஈரான் நாட்டுடன் நட்புறவாக இருந்த சீனாவே, தங்களது மக்களை வெளியேறச் சொல்லும்போது, ஈரானுக்கே தெரியாத சில ரகசிய தகவல்கள் சீனாவுக்கு தெரியவந்திருக்கலாம் என்பதை இந்த செய்தி உணர்த்துகிறது. இதன்மூலம் மூன்று முக்கிய அறிகுறிகள் புவிசார் அரசியலில் தென்பட்டது.



இந்நிலையில், இஸ்ரேல் ஈரான் மீது தற்போது தொடங்கி உள்ள தாக்குதலின் மூலம் இது சீனாவுக்கு முன்னரே தெரிந்திருக்கலாம் என்றும் அதனாலேயே தனது குடிமக்களை ஈரானில் இருந்து வெளியேறுமாறு சீனா முன்னரே அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.

இஸ்ரேல் வான் வெளி முடல். மக்கள் வெளியேற தடை. அவசர நிலை பிரகடனம் இஸ்ரேல் படைகளுடன் அமெரிக்காவும் சேர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன பதிலுக்கு ஈரானும் தாக்குதலுக்கு தயாராகி வருகிறது.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, மயிலாப்பூரில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, பூசாரிகளுக்கு பூசை உபகரணங்களை வழங்கினார். இம்மாநாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் இராமனுஜ எம்பார் சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் துரை, இரவிச்சந்திரன், மா. கவிதா, இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் ராம சுப்பிரமணியன், கிராமக் கோயில் பூசாரிகள் பேரவை அறங்காவலர் ஆர்.ஆர்.கோபால்ஜி, கிராமக்கோயில் பூசாரிகள் சங்கத் தலைவர் வாசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பூசாரிகள் நலனுக்காக புதிய அறிவிப்புகளை வெளியிட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, பிப். 28–

சென்னை மயிலாப்பூரில் நடைபெறும் கிராமக்கோவில் பூசாரிகள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பூசாரிகளின் நலனுக்காக புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:



* பொங்கல் தினத்தை முன்னிட்டு கிராம பூசாரிகளுக்கு புத்தாடை வழங்கப்படும்.

* பூசாரிகள் மரணமடைந்தால் வழங்கப்படும் வாரிசுதாரர் தொகை ரூ.1 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

* கிராம கோவில் பூசாரிகளுக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1.25 லட்சமாக உயர்த்தப்படும்.

* இயற்கை எய்தும் கிராம பூசாரிகளின் ஈம சடங்கிற்கான தொகை ரூ.10,000 ஆக உயர்த்தப்படும்.

* ஆண்டுதோறும் 500 பூசாரிகளுக்கு பயிற்சி வழங்கப்படும்.

* பூசாரிகளின் மகன் மற்றும் மகளுக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை மேலும் ரூ.1000 உயர்த்தப்படும்.

* பூசாரிகளின் மகன் மற்றும் மகளுக்கு வழங்கப்படும் கல்வி நிதி ரூ.1,000 உயர்த்தி வழங்கப்படும்.

* பூசாரிகளின் பிள்ளைகளின் இளநிலை, முதுநிலை படிப்பிற்கான நிதியுதவி மேலும் ரூ.2000 உயர்த்தி வழங்கப்படும்.

* பூசாரிகளின் பிள்ளைகளுக்கு தொழில் சார்ந்த பட்டப்படிப்பு உதவித்தொகை ரூ.2,000 உயர்த்தி வழங்கப்படும்.

* பூசாரிகளின் பிள்ளைகளுக்கு தொழில் பயிற்சி நிலையத்தில் பயில ஆண்டுக்கு ரூ.1000 உயர்த்தி வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம் –திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொய்யாத்தோப்பு திட்டப்பகுதியில் 61.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 324 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி.சிங், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ந.பிரியா ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் சிவ ராஜசேகரன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.




தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 28.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 16-ம் தேதி

## இளைஞர்களே AI பார்த்து பயப்படாதீங்க, AI-ஐ இப்படி டீல் பண்ணுங்க:




இந்திய ஐடி நிறுவனங்கள் தற்போது மிக வேகமாக ஏஐ கருவிகளை தங்களுடைய அன்றாட பணிகளில் ஒருங்கிணைத்து வருகின்றன. தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கான சேவைகளிலும் ஏஐ தொழில்நுட்பத்தை சேர்த்து வண்ணம் இருக்கின்றன. அந்த வகையில் ஏஐ தொழில்நுட்பம் இந்திய ஐடி நிறுவனங்களுக்கும் இந்திய ஐடி ஊழியர்களுக்கும் பெரிய சவாலாக உருவாகியிருக்கிறது.

ஒருபுறம் ஏஜ தொழில்நுட்பம் ஒவ்வொரு நொடியும் தன்னை அப்டேட் செய்து கொண்டு தன்னுடைய திறனை வளர்த்துக் கொண்டு வருகிறது. அதற்கு நிகராக தற்போது ஐடி துறையில் வேலை செய்து வரக்கூடிய ஊழியர்கள் தங்களை அப்டேட் செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். ஐடி நிறுவனங்கள் ஏஐ தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தங்களுடைய வேலைகளை மாற்றிக் கொள்ள வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டு இருக்கின்றன.

ஏஐ கண்டு இளைஞர்கள் அச்சமடைய கூடாது அதற்கு மாற்றாக ஏஐ தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏஐ தொழில்நுட்பம் உங்களை வேலையில் இருந்து நீக்கி விடாது ஆனால் வேலையை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் ஏஐ தொழில்நுட்பத்தை நீங்கள் கற்றுக்கொண்டு அதன் மூலம் உங்களுடைய வேலையை இன்னும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்

ஏஐ தொழில்நுட்பத்தை புரிந்து கொண்டு அதை சாமர்த்தியமாக பயன்படுத்த தொடங்குங்கள். ஏஐ பயன்படுத்தி நம்முடைய திறனையும் நம்முடைய உற்பத்தி திறனையும் மேம்படுத்திக் கொள்கிறோம் என்பது ஒவ்வொரு தனி நபரையும் பொறுத்தது இளைஞர்கள் ஏஐ தொழில்நுட்பம் வந்துவிட்டது இனி நமக்கு வேலை வாய்ப்பு இல்லை என அஞ்ச விடக்கூடாது. ஏஐ உங்கள் எதிரி அல்ல, உங்கள் செயல்திறனை மேம்படுத்த உதவும் கருவியாக பார்க்க தொடங்குங்கள் என அறிவுரை வழங்கப்படுகிறது



பழனி அருகே, வயலூரில் நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமின் நிறைவு நாள் நிகழ்ச்சியில், அமைச்சர் அர.சக்கரபாணி, டாக்டர்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

## மதுரையில் தமிழ் நாட்டின் முதல் மரம் வங்கி தொடக்க விழா!



மதுரை, பிப். 28–

மதுரையில் தமிழ் நாட்டின் முதல் மரம் வங்கி தொடக்க விழா இன்று காலை மதுரை மாவட்டம் வாடிப்பட்டி சாணம்பட்டியில் கடந்த பதினான்கு ஆண்டுகளாக இயற்கை வளம் காத்திடும் இளைஞர், பொறியாளர், கட்டுமானத் துறை தொழில் செய்து வரும் சமூக ஆர்வலர், கார்பன் நியூட்ரல் பார்ம் உருவாக்கிட உழைப்பவர், பார்வை பவுண்டேசன் நிறுவனர் சோழன் ஆ. குபேந்திரன் பேரார்வம் கொண்டு உருவாக்கி வரும் 50 000 மரக் கன்றுகள் வளாகம் திறப்பு விழா நடைபெற்றது.

பெங்களூரு வேளாண் விஞ்ஞானி டாக்டர் சுப்பிரமணிய யோகி மற்றும் தன் மகள் ஜனனி நினைவாக தனது பெரும் செல்வத்தை வாரி வழங்கி மகிழும் பூர்ணம் அம்மாள் அதனைத் திறந்து வைத்தனர். கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம் இயற்கையையும் மரங்களையும் காத்து மேம்படுத்துவது அனைவரது கடமை என்று தனது சிறப்புரையில் வலியுறுத்தினார். ஏராளமான சமூக அக்கறை கொண்ட பெருமக்கள் பங்கேற்று வாழ்த்தி மகிழ்ந்தனர். மரங்களை வளர்த்து பூமியை வளப்படுத்தும் முயற்சிக்கு அனைவரும் தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.



இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியம், எஸ்.கொடிக்குளம் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நடந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு: அகவிலைப்படி அதிகரிப்பு/ டிஏ அரியரும் கிடைக்கும்!






புதுடெல்லி, பிப். 28–

மத்திய அரசு ஊழியர்களும் ஓய்வூதிய தாரர்களும் தற்போது ஜனவரி 2026 –க்கான அகவிலைப்படி உயர்வுக்காக காத்திருக்கிறார்கள். மார்ச் முதல் வாரத்தில் ஹோலி பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. இந்த கொண்டாட்டங்களையொட்டி அரசு டிஏ உயர்வுக்கான அறிவிப்பை வெளியிடக்கூடும் என்றும் கூறப்படுகின்றது.

**மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி**

நாளுக்கு நாள் அதிகரிக்கும் விலைவாசி, பணவீக்கம் ஆகியவற்றை கட்டுப்படுத்த மத்திய அரசு ஊழியர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும் ஆண்டுக்கு 2 முறை, முறையே அகவிலைப்படி மற்றும் அகவிலை நிவாரணம் அளிக்கப்படுகின்றது. ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் டிஏ உயர்வு அமலுக்கு வருகின்றது. எனினும், இதற்கான அறிவிப்புகள் சற்று தாமதகமாக வெளியாகின்றன.

பொதுவாக ஜனவரி மாத அகவிலைப்படி உயர்வு மார்ச் மாதத்திலும், ஜூலை மாத அகவிலைப்படி செப்டம்பர்–அக்டோபர் மாதங்களிலும் வெளியிடப்படுகின்றன. அந்த வகையில் இந்த மார்ச் மாதம் டிஏ உயர்வுக்கான அறிவிப்பு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஹோலி பண்டிகையை ஒட்டி இந்த அறிவிப்பு வரக்கூடும், அல்லது மார்ச் மாத இரண்டாம் வாரத்தில் வரக்கூடும் என வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், இது குறித்த எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் இன்னும் வெளியிடப்படவில்லை.

**அகவிலைப்படி எவ்வளவு அதிகரிக்கும்?**

இந்த முறை, மத்திய ஊழியர்களின் அகவிலைப்படி 2% வரை அதிகரிக்கப்படலாம். இது பெரிய அளவில் ஊழியர்களுக்கு பயனளிக்கும். இதன் விளைவாக குறிப்பிடத்தக்க சம்பள உயர்வு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அகவிலைப்படி 58% ஆக உள்ளது. முன்னதாக, ஜூலை 2025 –இல் அகவிலைப்படி 3% அதிகரித்து மொத்த அகவிலைப்படி 58% ஆக உயர்ந்தது.

**AICPI–IW தரவுகள் கூறுவது என்ன?**

– சமீபத்தில் தொழிலாளர் அமைச்சகம் அதன் தரவுகளை வெளியிட்டது.

– தொழிலாளர் அமைச்சகத்தின் AICPI–IW தரவுகளின்படி, டிசம்பர் 2025 நிலவரப்படி குறியீடு 148.2 புள்ளிகளாக இருந்தது.

– இது முந்தைய மாதத்திலிருந்து மாறாமல் அப்படியே உள்ளது.

– அடிப்படையில், 12 மாத சராசரியைப் பயன்படுத்தி, 7வது ஊதியக் குழு சூத்திரத்தைப் பயன்படுத்தி அகவிலைப்படியை கணக்கிட்டால், அது 60.35% ஆக இருக்கும்.

– அகவிலைப்படி பொதுவாக தசம இடங்களைக் கொண்டு கணக்கிடப்படாததால், ஜனவரி 2026 முதல் அமலுக்கு வரும் புதிய டிஏ விகிதம் 60% ஆக இருக்கும்.

**சம்பள உயர்வு எவ்வளவு இருக்கும்?**

2% அகவிலைப்படி உயர்வுக்கு பிறகு மத்திய அரசு ஊழியர்களின் சம்பளம் எவ்வளவு அதிகரிக்கும்? இதை ஒரு உதாரணத்தின் மூலம் புரிந்துகொள்ளலாம். ஒரு மத்திய அரசு ஊழியரின் அடிப்படை சம்பளம் மாதம் ரூ. 40,000 என வைத்துக்கொள்வோம். அகவிலைப்படி 2% உயர்ந்தால், அகவிலைப்படி தொகை மாதத்திற்கு ரூ. 800 அதிகரிக்கும். இதன் விளைவாக அடிப்படை சம்பளத்தில் ஆண்டுக்கு சுமார் ரூ. 9,600 அதிகரிப்பு இருக்கும். மேலும், ஒரு ஊழியரின் அடிப்படை சம்பளம் ரூ. 30,000 என்றால், இது மாதத்திற்கு ரூ. 600 அதிகரிக்கும். இந்த வகையில் ஆண்டுக்கு ரூ. 7,200 அதிகரிப்பு இருக்கும்.

**டிஏ அரியர் எவ்வளவு கிடைக்கும்?**

ஜனவரி 1, 2026 முதல் மத்திய அரசு ஊழியர்களின் அகவிலைப்படி 2% வரை அதிகரிக்கலாம். அதாவது ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களுக்கான அகவிலைப்படி அரியர் தொகை மார்ச் மாத சம்பளத்துடன் சேர்த்து கிடைக்கும். அரசாங்கம் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை அகவிலைப்படியை உயர்த்துகிறது.

**8–வது ஊதியக்குழுவில் இதன் தாக்கம்**

இந்த விகிதங்கள் ஜனவரி 1 முதல் அமலுக்கு வரும். இப்போது அனைவரின் பார்வையும் 8வது ஊதியக் குழுவின் மீது உள்ளது. இந்த ஊதியக் குழுவை அரசாங்கம் எப்போது செயல்படுத்தும் என்பதுதான் கேள்வி. மே 2027க்குள் 8வது ஊதியக் குழுவை அரசாங்கம் செயல்படுத்தக்கூடும் என்று நம்பப்படுகிறது. ஏற்கனவே இதற்கான குழு அமைக்கப்பட்டுள்ளது, அதன் மறுஆய்வுப் பணிகள் நடந்து வருகின்றன. 8வது ஊதியக்குழுவில் அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்துடன் இணைக்க அரசு முடிவு செய்தால், ஜனவரி மாத அகவிலைப்படி உயர்வின் தாக்கம் அதில் பெரிதாக இருக்கும். 8வது ஊதியக் குழுவிற்கான சம்பள அமைப்பும் ஃபிட்மென்ட் ஃபாக்டரை அடிப்படையாகக் கொண்டது. 8வது ஊதியக்குழு சம்பளம், அலவன்சுகள், ஓய்வூதியம் என அனைத்தையும் மறு ஆய்வு செய்யும் என்பதால், இது ஊழியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். 1 கோடிக்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் இதனால் பலனடைவார்கள்.

## ரூ.1.5 லட்சம் கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்; உ.பி., முதல்வர் வெளிநாடு சுற்றுப்பயணத்துக்கு கை மேல் பலன்!



உத்தரபிரதேசம், பிப். 28–

சிங்கப்பூர், ஜப்பானுக்கு சுற்றுப்பயணம் சென்ற உ.பி., மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத், 1.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்புக்கு பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பெற்றார். உ.பி., முதல்வர் யோகி ஆதித்யநாத், நான்கு நாட்கள் அரசுமுறை பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு சென்றார். உ.பி.,யில் முதலீடு செய்வது தொடர்பாக பன்னாட்டு நிறுவனங்களுடன் அவர் ஒப்பந்தங்கள் மேற்கொண்டார்.

இந்த சுற்றுப்பயணத்தின் போது, உ.பி., அரசு 1.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும், 2.5 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீட்டுத் திட்டங்களையும் பெற்றது.

இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டவுடன், 5 லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

சுற்றுப்பயணத்தில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து விவரங்களை சமூக வலைதளத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் பகிர்ந்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில், "இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது'' என்று தெரிவித்துள்ளார்.

## பழனியில் உலக நன்மைக்காக மகா ருத்ர யாகம்!




பழனி, மார்ச். 28–

பழனியில், அடிவாரம் அருள்ஜோதி வீதியில் உள்ள சங்கராலயத்தில் உலக நன்மைக்காக மகா ருத்ர யாகம் முதல் நாள் பூஜை உடன் தொடங்கியது. இதற்கு மகா ருத்ர யாக கமிட்டி செயலாளர் முருகனடிமை எம் பாலசுப்பிரமணிய சாமிகள் தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட வேத விற்பனர்கள் பங்கேற்று வேத மந்திரங்களை முழங்கினர். நான்கு நாட்கள் தொடர்ந்து மகா ருத்ர யாகம் நடைபெறுகிறது. இதற்கான விழா ஏற்பாடுகளை சங்கராலயம் முருகனடிமை எம் பாலசுப்பிரமணிய சுவாமிகள், பி.சிவகுமார் ஆகியோர் செய்து வருகின்றனர்.

## கன்ஃபார்ம் டிக்கெட்: கோடைக்கால ரயில் பயணத்திற்கு 1% கேஷ்பேக் சலுகை!




சென்னை, பிப். 28–

கன்ஃபார்ம் டிக்கெட் நிறுவனம் கோடைக்கால ரயில் பயணத்தை மேலும் சிக்கனமாக்கும் வகையில் 1% கேஷ்பேக் சலுகையை அறிவித்துள்ளது. ஆப்பில் ரயில் டிக்கெட் முன்பதிவு செய்யும் பயனர்களுக்கு முன்பதிவு மதிப்பில் 1% தொகை நேரடியாக வாலெட்டில் சேர்க்கப்படும். கேஷ்பேக் க்கு எந்த உச்ச வரம்பும் இல்லை. இந்த சலுகை மே 31, 2026 வரை செல்லுபடியாகும்.

இந்த கேஷ்பேக் தொகையை 90 நாட்களுக்குள் அடுத்த ரயில் முன்பதிவில் பயன்படுத்தலாம். குடும்பங்கள், மாணவர்கள் மற்றும் விடுமுறை பயணிகள் பல பயணங்களைத் திட்டமிடும் இந்த காலத்தில், வரம்பற்ற சேமிப்பை பெறலாம். முன் பதிவுக்கு பிறகு கேஷ்பேக் தானாகவே வாலெட்டில் சேர்க்கப்படுவது பயனர்களுக்கு எளிதான அனுபவத்தை வழங்குகிறது. இதுகுறித்து தினேஷ் குமார் கோதா, தலைமை செயல் அதிகாரி, ixigo ரயில்கள் & கன்ஃபார்ம் டிக்கெட் கூறுகையில், "கோடைக்காலம் அதிக பயணங்கள் நடைபெறும் பருவமாகும். இந்த வரம்பற்ற கேஷ்பேக் சலுகை பயணிகளுக்கு கூடுதல் மதிப்பையும் நம்பிக்கையையும் வழங்கும். எளிமையான, வெளிப்படையான மற்றும் பயனுள்ள முன்பதிவு அனுபவத்தை வழங்குவதே எங்கள் நோக்கம்,'' என்றார்.


## மணிப்பால் ஃபின்டெக் கோயம்புத்தூரில் புதிய கிளை; தமிழ்நாட்டில் நிதி சேவை விரிவாக்கம்!



கோயம்புத்தூர் , பிப். 28–

மணிப்பால் ஃபின்டெக் கோயம்புத்தூரில் புதிய கிளை அலுவலகத்தை தொடங்கி, தமிழ்நாட்டில் நம்பகமான மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் நிதி சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்தியுள்ளது. 27 பிப்ரவரி அன்று தொடங்கப்பட்ட இந்த கிளை, வேகமாக வளர்ந்து வரும் கோயம்புத்தூரில் தங்க அடமான கடன் உள்ளிட்ட சிக்கலற்ற, பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான நிதி தீர்வுகளை வழங்கும் முக்கிய முன்னேற்றமாகும்.

மணிப்பால் குழுமத்தின் பாரம்பரிய நம்பிக்கையால் ஆதரிக்கப்படும் Manipal Group உடன் செயல்படும் மணிப்பால் ஃபின்டெக், டிஜிட்டல் செயல்திறனும் நேரடி கிளை அனுபவத்தையும் இணைக்கும் முறையை இந்த அலுவலகத்தின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் தங்கள் தங்கத்தை மதிப்பீடு செய்து, அவசர தேவைகளுக்கான நிதியை விரைவாகவும் எளிதாகவும் பெறலாம். நவீன உட்கட்டமைப்பு மற்றும் பயிற்சி பெற்ற நிபுணர்கள் மூலம் பாதுகாப்பான, ஒழுங்குமுறை தரநிலைகளின் சேவைகள் வழங்கப்படுகின்றன. கிளை தொடக்கத்தை முன்னிட்டு தலைமை நிர்வாக அதிகாரி Pooja Singh, பாரம்பரியம், புதுமை மற்றும் எளிய அணுகலை ஒருங்கிணைத்து வாடிக்கையாளர்களுக்கு வேகமான மற்றும் நம்பகமான நிதி அனுபவத்தை வழங்குவதே நிறுவனத்தின் நோக்கம் என தெரிவித்தார். பெங்களூரு மற்றும் சேலம் நகரங்களை தொடர்ந்து கோயம்புத்தூரில் தொடங்கப்பட்ட இந்த கிளை, இந்தியா முழுவதும் மணிப்பால் ஃபின்டெக்கின் வலையமைப்பை மேலும் வலுப்படுத்தும் அடுத்த கட்டமாகும்.



## சனி பெயர்ச்சி 2026 2029: 12 ராசிகளுக்கான பலன்கள், பரிகாரங்கள்




ஜோதிட சாஸ்திரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கிரகமாக சனி பகவான் கருதப்படுகிறார். மந்த கதி கொண்ட சனி பகவான் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு இடம்பெயர்வதையே நாம் "சனி பெயர்ச்சி" என்கிறோம். வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்குஇடம்பெயரும் நிகழ்வு 6.3.2026 அன்று, காலை 8:24 மணிக்கு,சனி பகவான் தன் சொந்த வீடான கும்ப ராசியில் இருந்து, குருவின் வீடான மீன ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். காலம்: 2026 முதல் 2029 தொடக்கம் வரை சனி பகவான் மீன ராசியில் சஞ்சரிப்பார்.

**12 ராசிகளுக்கான பொதுவான பலன்கள் (2026 2029)**

கீழே உள்ள அட்டவணையில் ஒவ்வொரு ராசிக்கும் சனி பகவான் எங்கு சஞ்சரிக்கிறார் மற்றும் அதன் தாக்கம் கொடுக்கப்பட்டுள்ளது:

**ராசி சனியின் நிலை பலன்கள் சுருக்கமாக**

மேஷம் 12–ம் இடம் (ஏழரை சனி தொடக்கம்) செலவுகள் அதிகரிக்கும், பொறுமை அவசியம்.

ரிஷபம் 11–ம் இடம் (லாப சனி) அபரிமிதமான லாபம், சொத்து சேர்க்கை உண்டாகும்.

மிதுனம் 10–ம் இடம் (கர்ம சனி) வேலைப்பளு கூடும், பதவி உயர்வு கிடைக்கும்.

கடகம் 9–ம் இடம் (பாக்கிய சனி) வெளிநாட்டுப் பயணம், ஆன்மீக ஆர்வம் கூடும்.

சிம்மம் 8–ம் இடம் (அஷ்டம சனி முடிவு) தடைகள் நீங்கி நிம்மதி பிறக்கும்.

கன்னி 7–ம் இடம் (கண்டச்சனி) கூட்டுத் தொழில் கவனம் தேவை, ஆரோக்கியம் மேம்படும்.

துலாம் 6–ம் இடம் (அர்த்தாஷ்டம சனி முடிவு) கடன் தொல்லை நீங்கும், வெற்றி தேடி வரும்.

விருச்சிகம் 5–ம் இடம் (பஞ்சம சனி) பிள்ளைகளால் மகிழ்ச்சி, கலைத்துறையில் ஆர்வம்.

தனுசு 4–ம் இடம் (அர்த்தாஷ்டம சனி) தாயின் ஆரோக்கியம் கவனம் தேவை, வீடு மாற்றம்.

மகரம் 3–ம் இடம் (ஏழரை சனி முடிவு) நீண்டகால கவலைகள் நீங்கும், தைரியம் கூடும்.

கும்பம் 2–ம் இடம் (பாத சனி) பண வரவு உண்டு, பேச்சில் நிதானம் தேவை.

மீனம் 1–ம் இடம் (ஜென்ம சனி) உழைப்பு அதிகம், மன உறுதி தேவை.

**தோஷ நிவர்த்தி பரிகாரங்கள்**

சனி பகவானின் பிடியில் இருந்து தற்காத்துக் கொள்ளவும், நற்பலன்களைப் பெறவும் கீழ்க்கண்ட பரிகாரங்களைச் செய்யலாம்:

1. குச்சனூர் சனீஸ்வரன் தரிசனம்: தேனி மாவட்டத்தில் உள்ள குச்சனூர் சுயம்பு சனீஸ்வரரை வழிபடுவது அனைத்து தோஷங்களுக்கும் மிகச்சிறந்த பரிகாரம்.
2. எள் தீபம்: சனிக்கிழமைகளில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடவும்.
3. தானம்: ஊனமுற்றோர்க்கும், ஏழைகளுக்கும் கருப்பு நிற ஆடைகள் அல்லது உணவு தானம் வழங்கவும்.
4. ஹனுமன் வழிபாடு: சனிக்கிழமைகளில் ஹனுமான் சாலிசா பாராயணம் செய்வது சனியின் தாக்கத்தைக் குறைக்கும்.

## சினிமா துளிகள்..!

## D56 குறித்து அப்டேட் கொடுத்த இயக்குநர் மாரிசெல்வராஜ்!



நடிகர் தனுஷ் போர் தொழில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் நடித்து முடித்துள்ள படம் 'கர'. இப்படம் வருகிற ஏப்ரல் மாதம் வெளியாகும் என தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து நடிகர் தனுஷ் தனது 56–வது படத்தில் நடிக்க உள்ளார். இப்படத்தை மாரிசெல்வராஜ் இயக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இப்படத்தின் அப்டேட் எதுவும் வெளியாகாமல் இருந்தது.

இந்த நிலையில், தனுஷின் 56–வது படத்தின் படப்பிடிப்பு செப்டம்பரில் தொடங்கும் என இயக்குனர் மாரி செல்வராஜ் அறிவித்துள்ளார். வரலாறு மற்றும் அரசியல் சார்ந்த இப்படம் தனது சினிமா பயணத்தில் மிகப்பெரிய படமாக அமையும் என அவர் கூறியுள்ளார்.




## நீரிழப்பைத் தடுக்க இஃப்தார் நேரத்தில் குடிக்க வேண்டிய பானங்கள்!



புனித ரமலான் மாதம் தொடங்கிவிட்டது. இஸ்லாமியர்கள் இந்த ரமலான் மாதத்தில் நாள் முழுவதும் உணவு, நீர், ஏன் எச்சில் கூட விழுங்காமல் கடுமையான நோன்பை மேற்கொள்வார்கள். அதுவும் இந்த ரமலான் நோன்பு மேற்கொள்ளும் காலத்தில் வெயில் அதிகம் கொளுத்துவதால், உடலில் நீரிழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே ரமலான் நோன்பு இருக்கும் போது உண்ணும் உணவில் கூடுதல் கவனத்தை செலுத்த வேண்டும். குறிப்பாக நீண்ட நேர நோன்பிற்கு பின் உட்கொள்ளும் இஃப்தார் நேரத்தில் உட்கொள்ளும் உணவை சரியாக தேர்ந்தெடுத்து உட்கொள்ள வேண்டும். அதுவும் பானங்களை தேர்வு செய்வதாக இருந்தால், குறைந்த சர்க்கரை, அதிக எலக்ட்ரோலைட் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த இயற்கை பானங்களை தேர்ந்தெடுத்து உட்கொள்ள வேண்டும்.

இப்படியான பானங்களை குடிக்கும் போது, அது உடலின் ஆற்றலை மீட்டெடுத்து, நீர்ச்சத்து குறைபாட்டை தடுக்கும். இப்போது உடல் ஆரோக்கியத்திற்காக ரமலான் நோன்பு முடிக்கும் நேரத்தில் குடிக்க வேண்டிய பானங்கள் குறித்து காண்போம்.

**1. பேரிச்சம் பழ பால்**

ரமலான் நோன்பின் போது இஃப்தார் நேரத்தில் பேரீச்சம்பழம் பாரம்பரியமாக உட்கொள்ளப்படுகிறது. ஏனெனில் பேரிச்சம் பழத்தில் இயற்கையான சர்க்கரை, நார்ச்சத்து மற்றும் அத்தியாவசிய தாதுக்கள் உள்ளன. இதனை பாலுடன் கலந்து தயாரிக்கப்படும் பேரிச்சம் பழ பாலாகவோ அல்லது ஸ்மூத்தியாகவோ தயாரித்து குடித்தால், அது உடலின் ஆற்றலை விரைவாக மீட்டெடுக்கும் மற்றும் நீரேற்றத்துடனும் வைத்துக் கொள்ளும்.

**2. எலுமிச்சை புதினா நீர்**

எலுமிச்சையும், புதினாவும் கலந்த நீர், வைட்டமின் சி அதிகம் நிறைந்த ஒரு சக்தி வாய்ந்த பானமாகும். ஏனெனில் இதில் உள்ள புதினா செரிமானத்தை சீராக்கி, வாய்வை குறைக்கும். அதுவும் குளிர்ந்த நீரில் எலுமிச்சை சாற்றுடன் புதினா இலைகளை சேர்த்து குடிக்கும் போது, அது உடலுக்கு உடனடி புத்துணர்ச்சியை அளிக்கும்

**3. மோர்**

மோர் மிகச்சிறந்த ஒரு புரோபயோடிக் பானமாகும். இது செரிமான மண்டலத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள பெரிதும் உதவி புரியும். இப்படிப்பட்ட மோரை இஃப்தான் நேரத்தில் குடிக்கும் போது அது உடலைக் குளிர்வித்து, செரிமான செயல்பாட்டை மேம்படுத்துவதுடன், அமிலத்தன்மையையும் குறைக்கும். இந்த மோரின் சுவையை அதிகரிக்க, அத்துடன் சீரகத் தூள், கறிவேப்பிலை, கொத்தமல்லி மற்றும் உப்பு சேர்த்து கலந்து குடிக்கலாம்.

**4.தர்பூசணி ஜூஸ்**

தர்பூசணியில் நீர்ச்சத்து அதிகம் இருப்பதை அனைவரும் அறிவோம். இந்த தர்பூசணியை ஜூஸாக தயாரித்து குடிப்பதன் மூலம், உடலுக்கு உடனடி ஆற்றல் கிடைக்கும். ரமலான் நோன்பு இருப்பவர்கள் இந்த பானத்தை தங்களின் தினசரி இஃப்தார் உணவில் சேர்த்து வந்தால், நீரிழப்பு தடுக்கப்பட்டு, உடலின் எலக்ட்ரோலைட்டு அளவுகளும் சமநிலையில் இருக்கும்.

**5. இளநீர்**

இளநீரில் பொட்டாசியம், மக்னீசியம் போன்ற எலக்ட்ரோலைட்டுகள் உள்ளன. இவை உடலில் இழந்த திரவங்களை விரைவாக ஈடுசெய்யும். மேலும் நோன்பினால் ஏற்படும் சோர்வைக் குறைக்க உதவும். எனவே இஃப்தார் நேரத்தில் இளநீரை தவறாமல் குடியுங்கள்.

(பொறுப்புத் துறப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல் இணையத்தில் கிடைக்கும் அனுமானங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன மற்றும் நம்பகத்தன்மைக்கு உத்தரவாதம் இல்லை. கட்டுரை தொடர்பான தகவலை உறுதிப்படுத்தவில்லை. மேலும் எங்கள் ஒரே நோக்கம் தகவலை வழங்குவது மட்டுமே. அதை வெறும் தகவலாக மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். எந்தவொரு தகவலையும் அனுமானத்தையும் பயிற்சி செய்வதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு முன், தயவுசெய்து சம்பந்தப்பட்ட நிபுணரை அணுகவும்.)

# வாட்ஸ் அப் முதல் உங்களின் சம்பளம் வரை: இதெல்லாம் மாறப் போகுது!!




சென்னை, பிப். 28–

2026ஆம் ஆண்டு இப்போதுதான் தொடங்கியது போல இருக்கிறது, ஆனால் அதற்குள் இரண்டு மாதங்கள் முடிந்து விட்டன. நாளை மறுதினம் மார்ச் மாதம் பிறக்கிறது. மார்ச் 1ஆம் தேதியில் இருந்து நாட்டில் பல்வேறு முக்கியமான மாற்றங்கள் நடைமுறைக்கு வருகின்றன. இந்த மாற்றங்கள் அனைத்தும் சாமானிய மக்களின் அன்றாட வாழ்க்கையிலே தாக்கத்தை ஏற்படுத்த போகின்றன என்பதால் இந்த மாற்றங்களை தெரிந்து வைத்துக்கொண்டு அதற்கு ஏற்ப தங்களுடைய பட்ஜெட்டை திட்டமிடுவது நல்லது.

**ரயில் டிக்கெட்:**

அடிக்கடி ரயில்களின் பயணம் செய்யக்கூடிய பயணிகளுக்கு மார்ச் 1ஆம் தேதியிலிருந்து மிக முக்கியமான ஒரு மாற்றம் நடைமுறைக்கு வருகிறது. அதாவது இனி யுடிஎஸ் செயலி செயல்படாது. மார்ச் 1ஆம் தேதியிலிருந்து பயணிகள் அன்ரிசர்வ்டு டிக்கெட்டுகள், பிளாட்பார்ம் டிக்கெட்டுகள் மற்றும் சீசன் டிக்கெட்டுகளை எடுப்பதற்கு யுடிஎஸ் செயலியை பயன்படுத்த முடியாது அதற்கு மாற்றாக ரயில் ஒன் செயலியை மட்டுமே பயன்படுத்த முடியும். ரயில் ஒன் செயலியில் அனைத்து ரயில் சேவைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு விட்ட சூழலில் மக்களிடையே அதனை பிரபலப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்திய ரயில்வே யுடிஎஸ் செயலியின் பயன்பாட்டை பிப்ரவரி 28ஆம் தேதி உடன் நிறுத்துகிறது. எனவே மார்ச் ஒன்றாம் தேதியிலிருந்து நீங்கள் பிளாட்பார்ம் டிக்கெட் மற்றும் சீசன் பாஸ் ,அன்ரிசர்வ்டு டிக்கெட்டுகளை பெறுவதற்கு ரயில்ஒன் செயலியை மட்டுமே பயன்படுத்த முடியும்.

**சிலிண்டர் விலை:**

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் சிலிண்டர் விலையில் மாற்றம் ஏற்படும். சர்வதேச விலை நிலவரங்களுக்கு ஏற்ப இந்தியாவை சேர்ந்த பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் சமையல் எரிவாயு மற்றும் வணிக ரீதியிலாக பயன்படுத்தப்படும் எரிவாயுக்களின் விலைகளை மாற்றம் செய்யும். சில சமயம் விலை அப்படியே நீடிக்கலாம், சில சமயம் விலை குறைக்கப்படலாம் அல்லது உயர்த்தப்படலாம். இதில் எது நடந்தாலும் சாமானிய மக்களின் மாதாந்திர பட்ஜெட்டிலேயே இது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் மக்கள் சிலிண்டர் விலைகளை கவனமாக தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

**அகவிலைப்படி:**

வழக்கமாக மத்திய அரசு ஊழியர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு முறை அவர்களின் அடிப்படை சம்பளத்தில் அகவிலைப்படி என்பது உயர்த்தி வழங்கப்படும். ஜனவரி மாதத்திற்கான அகவிலைப்படி உயர்வு தொடர்பான அறிவிப்பை எப்போதுமே அரசு மார்ச் மாதத்தில் தான் வெளியிடும். குறிப்பாக ஹோலி பண்டிகையை முன்னிட்டு அதற்கு முன்பாக அகவிலைப்படி உயர்வு தொடர்பான அறிவிப்பு வெளியாகும். அந்த வகையில் மார்ச் மாதத்தில் அகவிலைப்படி உயர்வு குறித்து அறிவிப்பு வெளிவர இருக்கிறது. இது ஒரு கோடிக்கும் அதிகமான மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய சம்பளம் மற்றும் ஓய்வூதியத் தொகையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

**வாட்ஸ் அப் & சிம் கார்டு:**

மத்திய அரசின் புதிய சிம்கார்டு பைண்டிங் விதிமுறையும் மார்ச் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது. அதாவது உங்களுடைய தொலைபேசியில் இருந்து சிம் கார்டை அகற்றி விட்டால் whatsapp போன்ற செயலிகள் வேலை செய்யாது. டிஜிட்டல் சார்ந்த மோசடிகளை தடுக்க இந்த நடைமுறையை அரசு கொண்டுவர இருக்கிறது. எனவே சிம் பைண்டிங் விதிமுறைகள் வரும் ஒன்றாம் தேதியில் இருந்து நடைமுறைக்கு வருகின்றன. வாட்ஸ் அப் வெப் சேவைகள் 6 மணி நேரத்திற்கு ஒருமுறை தானாகவே லாக் அவுட் ஆகிவிடும் பயனர்கள் மீண்டும் அதனை லாகின் செய்து கொள்ள வேண்டி இருக்கும்.

# இந்தியா 200 ஆண்டுகள் அடிமைபடுவதற்கு காரணமாக இருந்த கிழக்கிந்திய கம்பெனி திவாலானதாக அறிவிப்பு!!






புதுடெல்லி, பிப். 28–

இந்தியா ஆங்கிலேய ஆட்சியில் 200 ஆண்டு காலம் அடிமைப்பட்டு கிடந்தது. இந்தியர்களை அடிமைப்படுத்தி கொடுமைப்படுத்தி நம் நாட்டு வளங்களை எல்லாம் பிரிட்டிஷ்காரர்கள் சுரண்டி செல்வதற்கு காரணமாக இருந்தது கிழக்கிந்திய கம்பெனி தான். இந்தியாவில் பிரிட்டிஷ் வணிகத்திற்கும் ஆட்சிக்கும் தொடக்கப்புள்ளி வைத்த கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயர் பல ஆண்டுகளாக நம் வரலாற்றில் நீங்கா இடம் பிடித்துள்ளது.

1600 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ராணி பிறப்பித்த அரசு சாசனத்தின் மூலம் தான் கிழக்கிந்திய கம்பெனி தொடங்கப்பட்டது. இந்த கம்பெனியை சேர்ந்தவர்கள் கப்பல் மூலம் கடல் கடந்து பயணம் செய்து இந்தியா வருகை தந்தார்கள். வணிக நோக்கத்தில் காலடி வைத்து படிப்படியாக இந்தியாவில் தன்னுடைய கிளைகளை பரப்பி இந்தியாவையே ஆட்சி செய்தது கிழக்கிந்திய கம்பெனி. பின்னர் 1857ஆம் ஆண்டு புரட்சிக்கு பிறகு கிழக்கிந்திய கம்பெனி வசம் இருந்த அதிகாரம் பிரிட்டிஷ் அரசிடம் சென்றது. அப்படிப்பட்ட கிழக்கந்திய கம்பெனி திவாலானதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா போன்ற நாடுகளில் காலனி ஆதிக்கம் செய்ய அடித்தளம் போட்ட கிழக்கிந்திய கம்பெனி 152 ஆண்டுகளுக்கு முன்னதாகவே செயலிழந்து போனது. இதனை அடுத்து பிரிட்டிஷ் இந்தியரான சஞ்சீவ் மேத்தா கிழக்கிந்திய கம்பெனியை வாங்கினார். கிழக்கிந்திய கம்பெனி என்ற உரிமத்தை பயன்படுத்துவதற்கான அதிகாரத்தை பெற்ற அவர், இந்த கிழக்கிந்திய கம்பெனி இந்தியனால் நிறுவப்படுகிறது என்றார். 2005 ஆம் ஆண்டு ஆடம்பர தேநீர் , காபி மற்றும் உணவுப் பொருட்களை விற்பனை செய்யக்கூடிய நிறுவனமாக கிழக்கு இந்திய கம்பெனியை மாற்றினார். இந்த நிறுவனம் இதன்பிறகு பல்வேறு பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனமாக மாறியது. முதன்முதலாக 2010 ஆம் ஆண்டில் கிழக்கு இந்திய கம்பெனியின் முதல் கடை லண்டனில் மேஃபேர் பகுதியில் திறக்கப்பட்டது. கிழக்கிந்திய கம்பெனி கடையில் இருக்கிறோம் என இந்தியர்கள் பலரும் புகைப்படம் எடுத்து பதிவிட்டார்கள்.

இந்நிலையில் தான் சஞ்சீவ் மேத்தா மீண்டும் தொடங்கிய கிழக்கிந்திய கம்பெனியும் மூடப்பட்டு விட்டதாக செய்தி வெளியாகி இருக்கிறது. இந்த நிறுவனம் கடன்களை நிலுவையில் வைத்திருப்பதாக தெரிவித்துள்ளது. எனவே லண்டனில் உள்ள இந்த நிறுவனம் திவால் ஆனதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது நிறுவனத்தின் இணையதளமும் செயல்படவில்லை. மேஃபேரில் இருந்த கடையும் மூடப்பட்டு வேறு நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. கிழக்கிந்திய கம்பெனியோடு தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களும் மூடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அறிவிப்பின் மூலம் ஒரு வர்த்தக நிறுவனம் எப்படி ஒரு நாட்டையே அடிமைப்படுத்தி அழிந்து போனது என்ற வரலாற்றை இந்தியர்கள் மீண்டும் நினைவு கூற தொடங்கியுள்ளனர்.

# குரூப் 2 மற்றும் 2ஏ முதன்மை தேர்வு கட்டணம் செலுத்த மார்ச் 5-ந்தேதி வரை அவகாசம்!






சென்னை, பிப். 28–

குரூப் 2 மற்றும் 2ஏ முதன்மை தேர்வு கட்டணம் செலுத்த மார்ச் 5ந்தேதி வரை அவகாசம் வழங்கி டிஎன்பிஎஸ்சி அறிவித்து உள்ளது. குரூப் 2 மற்றும் 2ஏ முதன்மை தேர்வு– கட்டணம் செலுத்த கூடுதல் அவகாசம் இன்றுடன் முடிவடையும் நிலையில், மேலும் 5 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் 2 மற்றும் 2ஏ முதன்மை தேர்வு– கட்டணம் செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீட்டித்துள்ளது. முதன்மைத் தேர்விற்குத் தகுதி பெற்றவர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் ரூ. 200 தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்றும்,

இந்த நிலையில், தேர்வுக்கான கட்டணத்தைச் செலுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்ட விண்ணப்பதாரர்களின் கோரிக்கை இது வரை கட்டணம் செலுத்தாத சில தேர்வர்களுக்கு வரும் மார்ச் 5ம் தேதிக்குள் கட்டணம் செலுத்த அறிவுறுத்தி உள்ளது. பெரும்பான வர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கால அவகாசத்தை நீட்டித்துள்ளது.

குரூப் 2, 2ஏ முதன்மைத் தேர்வுக்குத் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டவர்களில், 766 விண்ணப்பதாரர்கள் இன்னும் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தவில்லை. 113 விண்ணப்பதாரர்கள் தங்களின் மாற்றுத்திறனாளி சான்றிதழ்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவில்லை என்று டி.என்.பி.எஸ்.சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, எஸ்எம்எஸ் மற்றும் மின்னஞ்சல் மூலம் தேர்வர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு கூடுதல் அவகாசம் என்பதால், கடைசி நேரத் தொழில்நுட்பக் கோளாறுகளைத் தவிர்க்க முன்கூட்டியே பணிகளை முடிப்பது நல்லது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரூப் 2, குரூப் 2ஏ பணிக்காக மொத்தம் 2,327 காலி பணியிடங்களை நிரப்புவதற்காக நடைபெறும் இந்தத் தேர்வில், தகுதி பெற்றவர்கள் உரிய நேரத்தில் கட்டணத்தைச் செலுத்தித் தங்களின் வாய்ப்பை உறுதி செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். கூடுதல் விவரங்களுக்கு www.tnpsc.gov.in என்ற இணையதளத்தைப் பார்வையிட்டு தெரிந்துகொள்ளலாம்.

# மார்ச் 1 முதல் ஸ்மார்ட்போன் விலை உயர்வு..!



சென்னை, பிப். 28–

நீங்கள் ஒரு புதிய போன் வாங்க திட்டமிட்டுள்ளீர்களா? உங்களுக்கு ஒரு அதிர்ச்சியூட்டும் செய்தி வந்துள்ளது.. ஸ்மார்ட்போன் பிரியர்களின் விருப்பமான பிராண்டுகளான Vivo மற்றும் iQoo ஆகியவை போன்களின் விலையை உயர்த்த தயாராக உள்ளன. இந்த புதிய விலைகள் மார்ச் 1 முதல் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## பெடரல் பேங்க் காலியிடங்கள் – டிகிரி




நிறுவனத்தின் பெயர்: ஃபெடரல் வங்கி
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
பெயர் பதவிகள்: இணை அதிகாரி (விற்பனை) பதவிகள்
பணியிட இடம்: இந்தியா முழுவதும்
தொடக்க தேதி: 20.02.2026
கடைசி தேதி: 04.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.federal.bank.in/careers

# வடகாடு ஊராட்சியில் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி -க்கு பாராட்டு விழா!



ஒட்டன்சத்திரம் பிப். 28–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியம் வடகாடு ஊராட்சிக்கு புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் பரப்பலாறுஅணை சுற்றுலா மையம் அமைக்க அரசு அனுமதி பெற்று தந்த பசுமை நாயகர், சரித்திரம் படைத்த சாதனை நாயகர் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களுக்கு பாராட்டு விழா வடகாடு ஊராட்சி, வடகாட்டில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு திமுக மாவட்ட அவைத் தலைவர் தி.மோகன் தலைமை வகித்தனர்.விழாவில் திமுக மாவட்ட துணைச் செயலாளர் சி.ராஜாமணி,வடக்கு ஒன்றிய செயலாளர் இரா.ஜோதீஸ்வரன், மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.கே பாலு,ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் திமுக ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய துணைச் செயலாளர் பி.சிவக்குமார் வரவேற்று பேசினார்.

விழாவில் ஒட்டன்சத்திரம் நகரக் கழக செயலாளர் ப.வெள்ளைச்சாமி, தெற்கு ஒன்றிய செயலாளர் தி. தர்மராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.கண்ணன், தொப்பம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் பி.சி தங்கம்,மத்திய ஒன்றிய செயலாளர் கா.பொன்ராஜ், மேற்கு ஒன்றிய செயலாளர் நா.சுப்பிரமணியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் செ.செல்வராஜ், நகர் மன்ற தலைவர் க.திருமலைசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துரை கூறினார். இவ்விழாவில் வடகாடு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இரா. தனலட்சுமி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் வெ.ராமராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மு.பிரபா, வடகாடு ஊராட்சி கழக பொறுப்பாளர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். முடிவில் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய துணை செயலாளர் கே.வி முருகானந்தம் நன்றி கூறினார்.



பழனி மாரியம்மன் கோவில் மாசித்திருவிழாவை முன்னிட்டு, வருத்தமில்லா வாலிபர் சங்கம் சார்பில், பொது விருந்து நடைபெற்றது. அதை கந்த விலாஸ் அதிபர் என் செல்வகுமார் தொடங்கி வைத்தார். அருகில் நிர்வாக தலைவர் எம். முருகானந்தம், கவுன்சிலர் கே.சுரேஷ் சிவி.செல்வம், அரிமா. சுந்தரம், ஆனந்தகுமார், முன்னாள் கோயில் சூப்பிரெண்டு முருகேசன், ஐயப்பா மணி ஆகியோர் உள்ளனர்.



# பிரதமர் மோடியை சந்திக்கிறார் எடப்பாடி பழனிசாமி!



மதுரை, பிப். 28–

தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல் தேர்தல் பிரசார கூட்டம் மதுராந்தகத்தில் ஜனவரி மாதம் நடைபெற்றது. தற்போது 2–வது கட்டமாக நாளை (மார்ச் 1) புதுச்சேரி, மதுரை என 2 இடங்களில் நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இதற்காக டெல்லியில் இருந்து சிறப்பு விமானம் மூலம் பிரதமர் மோடி சென்னை வருகிறார். இந்த நிலையில் பிரதமர் மோடியை, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிப்.28–ல் இரவு 8.30 மணியளவில் சென்னை விமான நிலையத்தில் சந்திக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. மரியாதை நிமித்தமாக பிரதமர் மோடியை, எடப்பாடி பழனிசாமி சந்திக்க இருப்பதாக கூறப்படுகிறது.

# காங்கிரசுக்கு மாநிலங்களவை சீட் கொடுப்பதாக முதலமைச்சர் உறுதி - செல்வப்பெருந்தகை!



சென்னை, பிப். 28–

சென்னை அறிவாலயத்தில் தி.மு.க. – காங்கிரஸ் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடைபெற்றது. தி.மு.க. உடனான பேச்சுவார்த்தைக்கு பின் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி இயற்கையாக அமைந்த கூட்டணி, உறுதியான கூட்டணி.
* தி.மு.க.வுடன் மட்டும் தான் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெற்றது.
* தி.மு.க. தவிர வேறு யாருடனும் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை.
* காங்கிரசுக்கு ஒரு மாநிலங்களவை சீட் கொடுப்பதாக முதலமைச்சர் கூறி உள்ளார்.
* தி.மு.க.வுடன் காங்கிரஸ் நடத்திய முதற்கட்ட தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நிறைவு பெற்றது.
* கூட்டணி பேச்சுவார்த்தை வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# பொலிவியாவில் விமானம் விழுந்து நொறுங்கியது; 15 பேர் பலி!



லா பாஸ், பிப். 28–

பொலிவியா நாட்டு விமானப்படை விமானம் விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர். மேலும் 30 பேர் காயம் அடைந்தனர்.

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு பொலிவியா. இங்கு மத்திய வங்கியிலிருந்து புதிய ரூபாய் நோட்டுகளை ஏற்றிச் சென்ற விமானம் தலைநகர் லா பாஸ்க்கு அருகே எல் ஆல்டோ நகரில் சாலையில் விழுந்து நொறுங்கியது. இதில் நெடுஞ்சாலையில் நின்று கொண்டிருந்த வாகனங்கள் சேதம் அடைந்தன. இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 30 பேர் காயம் அடைந்தனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த விபத்து மோசமான வானிலை காரணமாக நிகழ்ந்தது என தகவல் வெளியாகி உள்ளது. இந்த விபத்து காரணமாக எல் ஆல்டோ சர்வதேச விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் பிளஸ்-2 தேர்வு மார்ச் 2-ல் தொடங்குகிறது!



சென்னை, பிப். 28–

சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் இறுதி அல்லது மே முதல் வாரத்தில் நடைபெற இருப்பதால் பொதுத்தேர்வுகளை முன் கூட்டியே நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டு அதற்கான அட்டவணையை தேர்வு துறை வெளியிட்டது. ஏப்ரல் மாதம் 2–வது வாரத்திற்குள் அனைத்து தேர்வுகளையும் முடிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பிளஸ்–2 தேர்வு நாளை மறுநாள் 2–ந்தேதி தொடங்குகிறது.

2–ந்தேதி தொடங்கும் பொதுத்தேர்வு 26–ந்தேதி வரை நடைபெறுகிறது. இந்த தேர்வினை 8 லட்சத்து 27 ஆயிரத்து 475 பேர் எழுதுகிறார்கள். பள்ளி மாணவ–மாணவிகள் 7 லட்சத்து 99 ஆயிரத்து 692 பேரும் தனித்தேர்வர்கள் 27,783 பேரும் எழுதுகின்றனர். 7545 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ–மாணவிகள் 3412 தேர்வு மையங்களில் இத்தேர்வினை எழுத உள்ளனர். தேர்வு எழுதும் மாணவர்களுக்காக பல்வேறு வசதிகளை அரசு செய்து உள்ளது. தேர்வு மையங்களில் மின்தடை ஏற்படாமல் இருப்பதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் மின்சார வாரியம் எடுத்துள்ளது. பிளஸ்–2 செய்முறை தேர்வு கடந்த 9–ந்தேதி தொடங்கி 14–ந் தேதி வரை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து பொதுத்தேர்வு தொடங்குவதால் அரசு தேர்வுத்துறை மற்றும் பள்ளி கல்வித்துறை பல்வேறு முன்னேற்பாடுகளை செய்துள்ளது.

தேர்வு மையத்தில் ஒழுங்கீனங்களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்வுத்துறை எச்சரித்துள்ளது. ஆள் மாறாட்டம், விடைத்தாள் மாற்றுதல், காப்பி அடித்தல் போன்ற முறைகேடுகளில் ஈடுபட்டால் தேர்வு எழுதுவதற்கு 3 ஆண்டு காலம் தடை விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

பொதுத்தேர்வு தொடங்க இருப்பதால் பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

10–ம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் மாதம் 11–ந் தேதி தொடங்கி ஏப்ரல் மாதம் 6–ந்தேதி முடிகிறது. கடந்த ஆண்டு பிளஸ்–1 தேர்வில் தோல்வி யடைந்த வர்களுக்கு மார்ச் 3–ந்தேதி தொடங்கி 27–ந்தேதி வரை பொதுத்தேர்வு நடக்கிறது. பிளஸ்–2 பொதுத்தேர்வினை 4540 பறக்கும் படையினர் கண்காணிக்கிறார்கள். 44 ஆயிரத்து 624 பேர் தேர்வு கண்காணிப்பு பணியில் ஈடுபடுகிறார்கள்.

# வங்கிக் கணக்கு வைத்திருப்போருக்கு குட்நியூஸ்..! RBI-யின் முக்கிய வழிமுறைகள்..! அந்த பிரச்சனை இனி இருக்காது..!

புதுடெல்லி, பிப். 28–

டிஜிட்டல் வங்கி யுகத்தில், நமக்குத் தேவையானது நம் கையில் ஒரு மொபைல் போன் மட்டுமே. அனைத்து வங்கிப் பணிகளையும் ஒரு நொடியில் முடிக்க முடியும்.

இருப்பினும், இந்த வசதியுடன், சில ஆபத்துகளும் உள்ளன. வாடிக்கையாளர்களை தவறாக வழிநடத்தும் இருண்ட வடிவங்கள், குறிப்பாக வங்கி செயலிகள் மற்றும் வலைத்தளங்களின் வடிவமைப்பில், இந்திய ரிசர்வ் வங்கி தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது. இதுபோன்ற மோசடி நடைமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வங்கிகளுக்கு ஒரு காலக்கெடுவை வழங்கியுள்ளது.

**இருண்ட வடிவங்கள் என்றால் என்ன?**

வங்கி சேவைகளைப் பயன்படுத்தும் போது நாம் அறியாமலேயே கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவது, தேவையற்ற காப்பீடு அல்லது சேவைகளை பாப்–அப்கள் மூலம் மீண்டும் மீண்டும் காண்பிப்பது மற்றும் சிக்கலான சொற்களால் நம்மை குழப்புவது ஆகியவை இருண்ட வடிவங்கள் ஆகும். இவை பயனர்களை தவறாக வழிநடத்தி பணத்தை செலவிட வைக்கின்றன.

**ரிசர்வ் வங்கியின் முக்கிய உத்தரவுகள்.. ஜூலை 2026 காலக்கெடு**

நுகர்வோரின் நலன்களைப் பாதுகாக்க, பொறுப்பான வணிக நடத்தை திருத்த உத்தரவு 2026க்கான வரைவு வழிகாட்டுதல்களை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

வங்கிகள் ஜூலை 2026க்குள் தங்கள் வலைத்தளங்கள் மற்றும் மொபைல் பயன்பாடுகளில் இருந்து அனைத்து வகையான இருண்ட வடிவங்களையும் முற்றிலுமாக அகற்ற வேண்டும். நிதி தயாரிப்புகளை விளம்பரப்படுத்தும் போது, நுகர்வோரை தவறாக வழிநடத்தும் விளம்பரங்களைச் செய்யக்கூடாது.

எந்தவொரு புதிய சேவையையும் வழங்குவதற்கு முன்பு அல்லது கூடுதல் கட்டணங்களை விதிப்பதற்கு முன்பு நுகர்வோரிடமிருந்து வெளிப்படையான ஒப்புதலைப் பெறுவது கட்டாயமாகும்.

**நுகர்வோருக்கான நன்மைகள்:**

அவர்கள் பெறும் சேவைகள் மற்றும் அவர்களின் கட்டணங்கள் குறித்து அவர்களுக்கு முழுமையான புரிதல் இருக்கும். தெரிவிக்கப்படாத பரிவர்த்தனைகள் நிறுத்தப்படும். வெளிப்படையான நடைமுறைகள் வங்கி அமைப்பில் வாடிக்கையாளர் நம்பிக்கையை அதிகரிக்கும்.

ரிசர்வ் வங்கியின் இந்த முடிவு டிஜிட்டல் வங்கியை மிகவும் பாதுகாப்பானதாகவும் பொறுப்பானதாகவும் மாற்றும். வங்கி செயலிகளைப் பயன்படுத்தும் போது நுகர்வோர் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கவனமாகப் படிப்பதும் நல்லது.




உலகத் தாய் மொழி தினத்தினை யொட்டி மதுரை சேதுபதி மேல்நிலைப்பள்ளியில் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை மற்றும் நக்கீரர் தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற விழாவில் பத்திரிகையாளர் என்.ராஜபாண்டியன் எழுதிய நூலை நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை நிறுவனர் டி.குருசாமி வெளியிட மேனாள் காவல் உதவி ஆணையர் மணிவண்ணன் பெற்றுக் கொண்டபோது எடுத்த படம். விழாவில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசுக்கு ஜாக்டோ - ஜியோ சங்கத்தினர் கெடு!

சென்னை, பிப். 28–

'சட்டசபை தேர்தல் அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்பாக, வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வெளியிட வேண்டும்' என 'ஜாக்டோ – ஜியோ' சங்கத்தினர் தமிழக அரசுக்கு கெடு விதித்துள்ளனர். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பான 'ஜாக்டோ – ஜியோ' மாநில ஒருங்கிணைப்பாளர்கள் காந்திராஜ், சுரேஷ் ஆகியோரது அறிக்கை: முதல்வர் ஸ்டாலின், உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை கடந்த ஜனவரி 3ம் தேதி அறிவித்தார். அதை தொடர்ந்து, 9ம் தேதி அரசாணை வெளியிடப்பட்டது.




இந்த ஓய்வூதிய திட்டத்தை அறிவித்த முதல்வருக்கு, ஜாக்டோ – ஜியோ சார்பாக நன்றி அறிவிப்பு மாநாடு பிப்., 8ல் சென்னையில் நடத்தப்பட்டது. சட்டசபை தேர்தல் அறிவிப்பை, மார்ச் முதல் வாரத்தில் தேர்தல் கமிஷன் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல்வரால் அறிவிக்கப்பட்ட உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கான விதிகள், வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சட்டசபை தேர்தல் அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்பாக, வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வெளியிட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வார இறுதி நாளில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.2,400 அதிகரிப்பு!

சென்னை, பிப். 28–

சென்னையில் இன்று (பிப்ரவரி 28) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 2400 ரூபாய் அதிகரித்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிராமுக்கு 300 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 15 ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. தங்கத்தைப்போலவே வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. கிராமுக்கு 5 ரூபாய் உயர்ந்து, ஒரு கிராம் வெள்ளி 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோவுக்கு 5 ஆயிரம் ரூபாய் அதிகரித்து ஒரு கிலோ 3 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



# கரூர் தொடங்கி விவாகரத்து வரை... விஜயை துரத்துகிறதா 27-ந்தேதி டைம்லைன்!

பிரபல நடிகர் விஜய். இவர் தமிழக வெற்றிக் கழகம் எனும் கட்சியை கடந்த 2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கி நடத்தி வருகிறார். இந்த நிலையில் நடிகர் விஜய்யின் மனைவி சங்கீதாவுக்கும் அவருக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவுவதாக தகவல் பரவி வந்தது. இருவரும் பிரிந்து தனித்தனியாக வசித்து வருவதாகவும் கூறப்பட்டது. மேலும் கடந்த சில ஆண்டுகளாக இருவரும் ஒன்றாக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை.

நடிகர் விஜய்யும் அரசியல், பொது நிகழ்ச்சிகள், திருமண நிகழ்ச்சிகளுக்கு தனியாகவே சென்று வருகிறார். இந்த நிலையில் நடிகர் விஜய்யின் மனைவி சங்கீதா விவாகரத்து கோரி கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக செங்கல்பட்டு மாவட்ட கோர்ட்டில் சங்கீதா தாக்கல் செய்த மனுவில் விஜய் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார். இது சினிமா மற்றும் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இது அவரின் ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

விஜய்– சங்கீதா விவாகரத்து தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பல்வேறு வித தகவல்கள், கருத்துகள் பரவி வரும் நிலையில், விஜயின் அரசியல் பயணத்தின் ஒவ்வொரு திருப்பமும் ஒரே தேதியில் நடைபெறுவது தற்செயலா அல்லது திட்டமிட்ட உத்தியா என்ற விவாதமும் நடைபெற்று வருகிறது. இதற்கு ஒருவர் வெளியிட்ட பதிவே காரணம். அந்த பதிவில் கூறியிருப்பதாவது:–



27–ந்தேதியானால் விஜய்க்கு ஏதாவது ஒரு பிரச்சனை வந்து விடுகிறது. அதில் ஒரு சில நல்ல விஷயங்கள் நடந்துள்ளதாக கூறியுள்ள போஸ்டில் “27th Timeline – Coinci–dence?” என்று தொடங்கி கடந்த ஆறு மாத நிகழ்வுகளை பட்டியலிட்டுள்ளார்.

அதில், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27–ந்தேதி கரூர் மாவட்டம் வேலுச்சாமிபுரத்தில் நடைபெற்ற த.வெ.க. பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

அதனை தொடர்ந்து அக்டோபர் மாதம் 27–ந்தேதி பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை அவர்களது வீட்டிற்கு சென்று ஆறுதல் கூறாமல் அவர்களை மாமல்லபுரம் அழைத்து வந்து சந்தித்தது.

நவம்பர் 27–ந்தேதி அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் த.வெ.க.வில் இணைந்தது. (செங்கோட்டையன் போன்ற மூத்த தலைவர்கள் இணைப்பால் தவெகவுக்கு நன்மைதான்).

டிசம்பர் 27–ந்தேதி எச்.வினோத் இயக்கத்தில் விஜய் நடித்த கடைசி படமான 'ஜனநாயகன்' ஆடியோ வெளியீட்டு விழா, மலேசியாவில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

ஜனவரி 27–ந்தேதி 'ஜனநாயகன்' பட சென்ஸார் தொடர்பான வழக்கு மீண்டும் புதிய விசாரணைக்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்றம் தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்தது.

பிப் 27–ந்தேதி விஜயின் மனைவி சங்கீதா விவாகரத்து கோரி செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த செய்தி வெளியானது.

இப்படியாக பட்டியலிட்டு போஸ்ட்டின் இறுதியில் “Mar 27– Be Ready Guys” என்று கூறப்பட்டுள்ளது. இதனை விஜய் ரசிகர்கள் இணையத்தில் ட்ரெண்ட்டாக்கி வருகிறார்கள். மேலும் இதுதொடர்பாக காரசார விவாதமும் நடைபெற்று வருகிறது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020